01.09.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### தஞ்சாவூரில் 70 மி.மீ. மழை

தஞ்சாவூர் மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை இரவு அதிகபட்சமாக தஞ்சாவூரில் 70 மி.மீ. மழை பெய்தது.

மாவட்டத்தில் சில நாள்களாகப் பரவலாக மழை பெய்து வருகிறது. குறிப்பாக, தொடர்ந்து 3 நாள்களாக மாவட்டத்தில் அதிகபட்ச மழை அளவு தஞ்சாவூரில் பதிவாகி வருகிறது. மாவட்டத்தில் புதன்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணிநேரத்தில்

பெய்த மழையளவு (மில்லிமீட்டரில்):

தஞ்சாவூர் 70, வல்லம் 61, குருங்குளம் 57, மஞ்சலாறு 53, பட்டுக்கோட்டை 39, அணைக்கரை 32.6, கும்பகோணம் 27, ஈச்சன்விடுதி 26, மதுக்கூர் 22.6, திருவிடைமருதூர் 22, பூதலூர் 18.8, ஒரத்தநாடு 18.6, வெட்டிக்காடு 18.2, அய்யம்பேட்டை 18, பேராவூரணி 16, திருவையாறு 15, பாபநாசம் 9, நெய்வாசல் தென்பாதி 8.2, அதிராம்பட்டினம் 6.8, கல்லணை 5, திருக்காட்டுப்பள்ளி 4.8.

### மயிலாடுதுறையில் 22 மி.மீ. மழை

நாகை மாவட்டத்தில் கடந்த 3 நாள்களாக பரவலான மழை பெய்து வருகிறது. மாவட்டத்தில் அதிகளவாக மயிலாடுதுறையில் 22 மி.மீ மழை பதிவானது.

கடந்த 3 நாள்களாக நாகை மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பரவலான மழை பெய்து வருகிறது.

திங்கள்கிழமை முதல் மழை சீற்றம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

செவ்வாய்க்கிழமை மாலை முதல் இரவு வரை மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் நல்ல மழை பெய்தது.

புதன்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் மாவட்டத்தில் அதிகளவாக மயிலாடுதுறையில் 22 மி.மீ மழை பதிவானது.

மற்ற பகுதிகளின் மழையளவு (மி.மீட்டரில்): நாகப்பட்டினம் - 12.2. மணல்மேடு - 10. வேதாரண்யம்- 3.2. தரங்கம்பாடி- 3.

புதன்கிழமை பகல் நேரத்தில் மந்தமான வானிலை நீடித்தது. மாலை நேரத்தில் மயிலாடுதுறை மற்றும் சில பகுதிகளில் லேசான மழையும், இரவு நேரத்தில் நாகப்பட்டினம் மற்றும் சுற்றுப் பகுதிகளில் பலத்த மழையும் பெய்தது.

## மன்னார்குடியில் 121 மி.மீ. மழை

மன்னார்குடியில் செவ்வாய்க்கிழமை 121 மில்லி மீட்டர் மழைப் பெய்தது.

கடந்த சில நாள்களாக வெயிலின் தாக்கம் அதிகமிருந்த நிலையில், கடந்த இரு நாள்களாக லேசான மழை பெய்து வருகிறது. செவ்வாய்க்கிழமை காலை முதல் வெயிலின் தாக்கம் குறைந்து லேசான ஈரக்காற்று வீசியது. இரவு சுமார் 8 மணியளவில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மழைப் பெய்யத் தொடங்கியது. அதிகபட்சமாக மன்னார்குடியில் 121 மில்லி மீட்டர் மழைப் பதிவானது.

பிற இடங்களில் பெய்த மழையளவு மில்லி மீட்டரில்: வலங்கைமான்- 44.2, பாண்டவையாறு தலைப்பு- 38.4, நீடாமங்கலம்- 27, நன்னிலம்- 24.6, குடவாசல்- 13.2, திருவாரூர்- 6.8, திருத்துறைப்பூண்டி- 5, முத்துப்பேட்டை- 4.

## மானியத்தில் நுண்ணீர் பாசனம் அமைக்க விண்ணப்பிக்கலாம்

திருவாரூர் மாவட்டத்தில் தோட்டக்கலைத் துறை மூலம் அரசு மானியத்தில் நுண்ணீர் பாசன வசதி ஏற்படுத்த விரும்பும் விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் இல. நிர்மல்ராஜ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: குறைந்த நீரீல் அதிக பரப்பு சாகுபடி செய்ய நுண்ணீர் பாசன திட்டம் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இயற்கை நீர்வளம் குறைந்து வரும் சூழலில் இத்திட்டத்தின் மூலம் 40 முதல் 60 சதவீதம் நீர் சேமி க்கப்படுகிறது.

சிறு,குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் நுண்ணீர் பாசன அமைப்புகள் ஹெக்டேருக்கு அதிகபட்சமாக ரூ. 1 லட்சம் வழங்கப்படுகிறது. சிறு, குறு விவசாயிகளுக்கு காய்கறி பயிர்களுக்கு 2.5 ஏக்கர் மற்றும் இதர பயிர்களுக்கு 5 ஏக்கர் வரை இலவசமாக நுண்ணீர் பாசன வசதிகளை தங்கள் நிலங்களில் அமைத்துக்கொள்ளலாம்.

இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மத்திய அரசு இத்திட்டத்தை சிறு, குறு விவசாயிகளுக்கு 35 முதல் 45 சதம் வரை மட்டுமே மானியம் வழங்கிய போதும் தமிழக அரசு விவசாயிகளின் நலத்தை காக்கும் வகையில் 100 சதவீத மானியத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

நிகழாண்டில் தமிழகத்தில் 46,099 ஹெக்டேர் பரப்பில் நுண்ணீர் பாசனம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் பொது பிரிவு விவசாயிகளுக்கு ரூ. 245 கோடி மானியம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி விவசாயிகள் இத்திட்டத்தில் பங்கேற்க முன்னுரிமை வழங்கப்படுகிறது. இதற்காக ரூ.69.26 கோடி நிதி தனியாக ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் மாவட்டத்தில் 2016-17 நிதியாண்டில் 400 ஏக்கர் பரப்பில் ரூ.1.10 கோடி மானியத்தில் செயல்பட உள்ளது. முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

இத்திட்டத்தில் பங்கேற்க விரும்பும் விவசாயிகள் குடும்ப அட்டை நகல், கிராம அடங்கல், கணினி சிட்டா, நில வரைபடம், சிறு, குறு விவசாயிகளாக இருந்தால் அதற்கான வட்டாட்சியரிடம் இருந்து பெறப்பட்ட சான்று ஆகிய ஆவணங்களுடன் அருகில் இருக்கும் வட்டார தோட்டக்கலை அலுவலர் துணை தோட்டாக்கலை அலுவலர், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகி பயன்பெற கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும், விவரங்களுக்கு மாவட்ட வேளாண் இணை இயக்குநர் திருவாரூர் 9750963311, மாவட்ட தோட்டக் கலை துணை இயக்குநர் 9443847142 தொடர்பு கொள்ளலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விவசாயிகளுக்கான வேளாண் சுற்றுலா

விழுப்புரம் மாவட்ட விவசாயிகளை வேளாண் துறை சார்பில் புதன்கிழமை வெளிமாநில சுற்றுலாவுக்கு அழைத்துச் சென்றனர்.

மாவட்டத்தில் 2016-17ஆம் ஆண்டுக்கான வேளாண் சுற்றுலாத் திட்டத்தில் விவசாயிகளை ஆந்திர மாநிலம் நெல்லூர், ராஜமுந்திரி உள்ளிட்ட இடங்களுக்கு சுற்றுலா அழைத்துச் சென்றனர். அங்கு தோட்டக்கலை பயிர்கள், வேளாண் ஆராய்ச்சி நிலையங்களைப் பார்வையிட்டு வரவுள்ளனர். இதற்காக மாவட்டத்தில் இருந்து சுமார் 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் சுற்றுலா சென்றுள்ளனர். ஆட்சியர் அலுவலகத்திலிருந்து பேருந்தில் புறப்பட்ட விவசாயிகள் குழுவினரை மாவட்ட ஆட்சியர் எம்.லட்சுமி வழியனுப்பி வைத்தார். மாவட்ட வருவாய் அலுவலர் சி.ராஜசேகரன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## சங்கராபுரத்தில் 58 மி.மீ மழை

மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வரும் நிலையில், செவ்வாய்க்கிழமை இரவு சங்கராபுரத்தில் அதிகளவாக 58 மி.மீட்டர் மழை பதிவானது. வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகத்தில் கடந்த சில நாள்களாக கடலோர மாவட்டங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது.

விழுப்புரம் மாவட்டத்திலும் கடந்த 4 நாள்களாக இரவு நேரத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. செவ்வாய்க்கிழமை இரவு தொடங்கி புதன்கிழமை அதிகாலை வரை மாவட்டத்தின் பல இடங்களில் கனமழை பெய்தது. மரக்காணத்தில் 8, செஞ்சியில் 19, திருக்கோவிலூரில் 16.5, திண்டிவனம் 17, வானூர் 24, அதிகபட்சமாக சங்கராபுரத்தில் 58 மி.மீட்டர் மழையளவு பதிவானது. மாவட்டத்தில் மொத்தம் 143 மி.மீட்டர் மழையும், சராசரியாக 17.8 மி.மீட்டர் மழை பெய்துள்ளது. இந்தத் தொடர் மழையால் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## பரமத்தி வேலூரில் வாழைத்தார்களின் விலை உயர்வு

பரமத்தி வேலூர் வாழைத்தார் ஏலச் சந்தையில் வாழைத்தார்களின் விலை உயர்ந்துள்ளதால், வாழைப் பயிர் செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பரமத்தி வேலூர் காவிரி கரையோரப் பகுதிகளில் பல்லாயிரக்கணக்கான ஏக்கரில் வாழைப் பயிர் செய்யப்பட்டுள்ளது. இங்கு விளையும் வாழைத்தார்கள் கேரளம், கர்நாடகம், ஆந்திரம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும், சேலம், கோவை, ஈரோடு, கரூர், திண்டுக்கல் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும் தினந்தோறும் லாரிகள் மூலம் அனுப்பப்பட்டு வருகின்றன.

மேலும், சிறு விவசாயிகள் பரமத்தி வேலூர் வாழைத்தார் சந்தைக்கு உற்பத்தியான வாழைத்தார்களை நேரடியாக கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர்.

கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில், பூவன் வாழைத்தார் அதிகபட்சமாக ரூ.400 வரை விற்பனையானது. ரஸ்தாளி அதிகபட்சமாக ரூ.250-க்கும், பச்சைலாடன் அதிகபட்சமாக ரூ.300-க்கும், கற்பூரவள்ளி ரூ.200-க்கும் ஏலம் போயின. மொந்தன் வாழைக்காய் ஒன்று ரூ.4-க்கு விற்பனையானது.

புதன்கிழமை 700-க்கும் மேற்பட்ட வாழைத்தார்கள் ஏலத்துக்கு கொண்டு வரப்பட்டிருந்தன. இதில் பூவன் அதிகபட்சமாக ரூ.700 வரை விற்பனையானது. ரஸ்தாளி அதிகபட்சமாக ரூ.400-க்கும், பச்சைலாடன் அதிகபட்சமாக ரூ.450-க்கும், கற்பூரவள்ளி ரூ.300-க்கும் ஏலம் போயின. மொந்தன் வாழைக்காய் ஒன்று ரூ.7-க்கு விற்பனையானது.

அமாவாசை மற்றும் விநாயகர் சதுர்த்தி விழா வருவதையொட்டி வாழைத்தார்களின் விலை உயர்ந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். இதனால் வாழைப் பயிர் செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## நிகழாண்டில் 2,169 ஏக்கரில் நுண்ணீர்ப் பாசனத் திட்டம் அமைக்க இலக்கு

நாமக்கல் மாவட்டத்தில் நிகழாண்டில் 2,169 ஏக்கரில் நுண்ணீர்ப் பாசனத் திட்டம் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் மு.ஆசியா மரியம் வெளியிட்ட செய்தி: குறைந்த நீரில் அதிக பரப்பு சாகுபடி செய்திட நுண்ணீர்ப் பாசனத் திட்டம்

செயல்படுத்தப்பட்டு வருகிறது. இயற்கை நீர்வளம் குறைந்து கொண்டே வரும் இந்த சூழலில், இத்திட்டத்தின் மூலம் 40 முதல் 60 சதவீதம் நீர் சேமிக்கப்படுகிறது. எந்த மாநிலங்களிலும் இல்லாத வகையில் தமிழகத்தில் மட்டும் சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் நுண்ணீர்ப் பாசன அமைப்புகள் ஹெக்டேர் ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.1 லட்சம் வரை மானியம் வழங்கப்படுகிறது.

சிறு, குறு விவசாயிகளுக்கு காய்கறி பயிர்களுக்கு 2.5 ஏக்கர் மற்றும் இதர பயிர்களுக்கு 5 ஏக்கர் வரை இலவசமாக நுண்ணீர்ப் பாசன அமைப்புகளை அமைத்துக் கொள்ளலாம். இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

மத்திய அரசு சிறு,குறு விவசாயிகளுக்கு 35 சதவீதம் முதல் 45 சதவீதம்வரை மட்டுமே மானியம் வழங்கியபோதிலும், தமிழக அரசால் 100 சதவீத மானியத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

நிதழாண்டில் தமிழகத்தில் 46,099 ஹெக்டேர் பரப்பில் நுண்ணீர்ப் பாசனம் அமைக்கிட கிட்டமிடப்பட்டுள்ளது. பொதுப் பிரிவு விவசாயிகளுக்கு ரூ.245.56 கோடி மானியம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி விவசாயிகள் இத்திட்டத்தில் பங்கேற்க முன்னுரிமை வழங்கப்படுகிறது. இதற்காக ரூ.69.26 கோடி நிதி தனியாக ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டமானது நாமக்கல் மாவட்டத்தில் 2,169.40 ஏக்கர் பரப்பளவில் சுமார் ரூ.15 கோடி மானியத்தில் செயல்படுத்தப்பட உள்ளது. முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இத்திட்டத்தில் பங்கேற்க விரும்பும் விவசாயிகள் குடும்ப அட்டை நகல், அடங்கல், கணிணி சிட்டா, நில வரைபடம்,சிறு, குறு விவசாயிகளாக இருப்பின் அதற்கான வட்டாட்சியரிடம் இருந்து பெறப்பட்ட சான்று ஆகிய ஆவணங்களுடன் அருகில் இருக்கும் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகலாம். மாவட்ட வேளாண் இணை இயக்குநரை 9442135016 என்ற செல்லிடப்பேசி எண்ணிலும், மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநரை 9443947278 என்ற செல்லிடப்பேசி எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.

## கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பரவலாக மழை

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை இரவு முதல் புதன்கிழமை அதிகாலை வரை பரவலாக மழை பெய்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக பகலில் வெயிலும், மாலையில் மேகமூட்டமும் காணப்பட்டன. இந்த நிலையில், செவ்வாய்க்கிழமை மாலை வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. இரவு 7 மணிக்கு மழை பெய்ய தொடங்கியது. தொடர்ந்து புதன்கிழமை அதிகாலை 5 மணி வரை மாவட்டத்தில் பரவலாக பலத்த மழை பெய்தது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் காலை 8 மணி வரையில் பெய்த மழையளவு (மி.மீட்டரில்):

கிருஷ்ணகிரி-67.40, தளி-45, நெடுங்கல்-39.60, ஒசூர்-31, பெனுகொண்டாபுரம்-30.20, பாரூர்-28.40, ராயக்கோட்டை-21, போச்சம்பள்ளி-13.40, சூளகிரி-13, தேன்கனிக்கோட்டை-8, ஊத்தங்கரை-5.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 7,407 கன அடியாக அதிகரிப்பு

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 7,407 கன அடியாக அதிகரித்துள்ளது.

கர்நாடக மாநிலத்தில் காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக அங்குள்ள கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன. மேலும் காவிரியிலும் நீர்வரத்து சீராக உள்ளதால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 7 ஆயிரம் கன அடிக்கும் குறையாமல் உள்ளது.

இந்த நிலையில் புதன்கிழமை காலை அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 7,407 கன அடியாக அதிகரித்துள்ளது. அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்காக நொடிக்கு 1,250 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. நீர் திறப்பை விட அணைக்கு நீர்வரத்து அதிகமாக இருப்பதால் அணையின் நீர்மட்டம் புதன்கிழமை காலை 72.82 அடியாக உயர்ந்துள்ளது. அணையின் நீர் இருப்பு 35.17 டி.எம்.சி.யாக உள்ளது.

## நுண்ணீர் பாசனத் திட்டம்: இந்த ஆண்டு இலக்கு 4,300 ஏக்கர்: விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்

கோவை மாவட்டத்தில் இந்த ஆண்டு அரசு மானியத்துடன் சுமார் 4,300 ஏக்கரில் நுண்ணீர் பாசனத் திட்டத்தை செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் த.ந.ஹரிஹரன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நுண்ணீர் பாசனத் திட்டத்தின் மூலம் 40 முதல் 60 சதவீதம் வரையிலும் நீர் சேமிக்கப்படுகிறது. நீர்வளம் குறைந்து வரும் இந்தக் காலகட்டத்தில் நுண்ணீர் பாசனத் திட்டம் முக்கியத்துவம் பெறுகிறது. நாட்டில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் தமிழகத்தில் குறு, சிறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் நுண்ணீர் பாசன அமைப்புகள் (எக்டேருக்கு அதிகபட்சம் ரூ.1 லட்சம் வரையிலும்) வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் குறு, சிறு விவசாயிகளுக்கு காய்கறிகளுக்கு 2.5 ஏக்கர் வரையும், இதர பயிர்களுக்கு 5 ஏக்கர் வரையும் முழு மானியத்துடன் நுண்ணீர் பாசன அமைப்புகள் அமைக்கப்படும். மற்ற விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

மத்திய அரசு இத்திட்டத்துக்கு 35 முதல் 45 சதவீதம் வரை மட்டுமே மானியம் வழங்கும்போதிலும், தமிழக அரசு 100 சதவீத மானியம் வழங்கி செயல்படுத்துகிறது. நடப்பாண்டில் இந்தத் திட்டத்துக்கு தமிழக அரசு ரூ.245 கோடி ஒதுக்கியுள்ளது. ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கு என தனியாக ரூ.69.26 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

கோவை மாவட்டத்தில் நடப்பாண்டில் ரூ.12.01 கோடி மானியத்தில் 4,311 ஏக்கரில் நுண்ணீர் பாசனத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தில் பங்கேற்க விரும்பும் விவசாயிகள், குடும்ப அட்டையின் நகல், கிராம அடங்கல், கணினி சிட்டா, நில வரைபடம், குறு, சிறு விவசாயி என்பதற்கான சான்றுகளுடன் அருகில் உள்ள வட்டார தோட்டக் கலை உதவி இயக்குநர் அல்லது வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகலாம்.

மேலும் இதுகுறித்த விவரங்களுக்கு மாவட்ட வேளாண் இணை இயக்குநர் அலுவலகத்தை 0422-2432739 என்ற எண்ணிலும், மாவட்ட தோட்டக் கலைத்

துறை துணை இயக்குநர் அலுவலகத்தை 0422-2453578 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**உருண்டை வெல்லம் விலை உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி**

தாராபுரம் பகுதியில் தயாரிக்கப்படும் உருண்டை வெல்லத்திற்கு இதுவரை இல்லாத அளவிற்கு அதிபட்ச விலை கிடைத்துள்ளதால் விவசாயிகள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தாராபுரம் தாலுகாவில் அலங்கியம், செலாம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 10 ஆயிரம் ஏக்கரில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டது. இதில், சுமார் 5 ஆயிரம் ஏக்கர் கரும்பு உடுமலை கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குப் பதிவு செய்யப்பட்டது. சர்க்கரை ஆலையில் ஏராளமான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டதால், கரும்பு வெட்டுவதற்கான பணி வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது. விவசாயிகள், கரும்பை வெட்டி ஆலைக்குக் கொண்டு வரவேண்டும் என அறிவுறுத்தப்பட்டனர். சுமார் 3 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் பதிவு செய்யப்பட்டிருந்த கரும்பை விவசாயிகள் வெட்டி உடுமலை சர்க்கரை ஆலைக்குக் கொண்டுசென்றனர்.

காலதாமதம் ஏற்பட்டதால், சர்க்கரை ஆலைக்கு லாரி மூலமாக கரும்பை எடுத்து செல்ல விரும்பாத விவசாயிகள், கரும்பு ஆலைகள் அமைத்து, வெல்லம் தயாரிக்க முடிவு செய்தனர். இதற்காக, மேட்டூர், மேச்சேரி, சேலம், தருமபுரி ஆகிய மாவட்டங் களில் இருந்து தொழிலாளர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர். இத்தொழிலாளர்கள், அலங்கியம் பகுதியில் முகாமிட்டு கரும்பில் இருந்து சாறு பிழிந்து, காய்ச்சி உருண்டை வெல்லம் தயாரிக்கும் பணியில் குடும்பத்துடன் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு உருண்டை வெல்லம் 30 கிலோ சிப்பம் ரூ.1,100 வரை விற்றது. இந்த ஆண்டு ரூ. 1,440 வரை என விலை அதிகரித்துள்ளது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது:

கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ஒப்பந்தம் போடப்பட்டிருந்தாலும், அந்த நிர்வாகம் விதிக்கும் நிபந்தனைகளால் பல்வேறு நடைமுறை சிக்கல்கள் ஏற்படுகின்றன. இதன் காரணமாக ஆலைக்கு கரும்பு எடுத்துச் செல்வதைத் தவிர்த்து, நாங்களே

உருண்டை வெல்லம் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம். கடந்த ஆண்டைக் காட்டிலும் இருமடங்கு லாபம் கிடைத்துள்ளது. உருண்டை வெல்லம் விற்றால் உடனடியாகப் பணம் நிலுவையின்றி ரொக்கமாகக் கிடைக்கிறது. ஆலைக்கு கரும்பை விற்றால் தவணை முறையில்தான் பணம் கிடைக்கிறது என்றனர்.

## விளைபொருள் சேமிப்புப் பயிற்சி

வெள்ளக்கோவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விவசாயிகளுக்கான விளைபொருள் சேமிப்புப் பயிற்சிக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கோவை வேளாண்மை உதவி இயக்குநர் (விளம்பரம் மற்றும் பிரசாரம்) மோகனசுந்தரம் பேசியதாவது:

விவசாயிகள் தனித்தனியாக இல்லாமல், குழுக்களாகச் சேர்ந்து செயல்பட்டால் நல்ல லாபம் ஈட்ட முடியும். மத்திய, மாநில அரசுகள் பல்வேறு விவசாய நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. குளிர்சாதன சேமிப்புக் கிடங்கு, உலர் களம், இருப்பு வைக்கும் பொருள்களுக்குக் கடன் வசதி, உழவர் நல நிதித் திட்டத்தின் கீழ் காப்பீட்டு வசதி போன்றவை வழங்கப்படுகின்றன.

விலை குறைவாக இருக்கும் சமயத்தில், காய்கறிகள், பழங்கள், புளி போன்றவற்றை மூன்று மாதங்கள் வரை இருப்புவைத்து விற்பனை செய்யலாம். பருத்தி, பருப்பு வகைகள், எண்ணெய்வித்துக்களை நீண்ட காலம் சேமித்து வைக்க முடியும்.

தேவைக்கேற்ப பயிரிடுதல், விஞ்ஞான முறை சேமிப்பு, விலை கூடும்போது விற்பனை, சந்தை நிலவரம் போன்றவற்றை வேளாண் அலுவலர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். அரசின் திட்டங்களைத் தவறவிடாமல் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார்.

தாராபுரம் வேளாண்மை அலுவலர் மணிவேல்முருகன், வெள்ளக்கோவில் விற்பனைக் கூடக் கண்காணிப்பாளர் மகுடேஷ்வரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை தமிழ்நாடு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை சார்பில் செய்யப்பட்டிருந்தன.

## பெருந்துறையில் ரூ. 1.15 கோடிக்கு கொப்பரை ஏலம்

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ. 1 கோடியே 15 லட்சத்துக்கு கொப்பரை ஏலம் புதன்கிழமை நடைபெற்றது.

பெருந்துறை மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதி விவசாயிகள் 4,164 மூட்டைகளில் 2,05,000 கிலோ கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

இதில், முதல் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ. 57.25-க்கும், அதிகபட்சமாக ரூ. 59.60-க்கும் ஏலம் மூலமாக விற்பனையானது. இரண்டாம் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ. 42.30-க்கும், அதிகபட்சமாக ரூ. 57.15-க்கும் விற்பனையானது. மொத்தம் ரூ. 1 கோடியே 15 லட்சத்துக்கு வர்த்தகம் நடைபெற்றது.

## உரிமம் இன்றி நாற்றுப் பண்ணைகள் நடத்தினால் கடும் நடவடிக்கை: விதை ஆய்வுத் துணை இயக்குநர் எச்சரிக்கை

உரிமம் இன்றி நாற்றுப் பண்ணைகள் நடத்தினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஈரோடு விதை ஆய்வுத் துணை இயக்குநர் கு.அண்ணாதுரை எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து, அவர் புதன்கிழமை வெளியிட்ட செய்தி:

ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் காய்கறி நாற்றுகள் பூ மற்றும் பழச்செடிகள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. குறிப்பாக காய்கறிகளான வெங்காயம், தக்காளி, கத்தரி போன்றவை விற்பனை செய்யப்படுகின்றன.

விவசாயிகளின் தேவைகளுக்கேற்ப பலர் காய்கறி நாற்றுப் பண்ணைகளை அமைத்து விநியோகம் செய்கின்றனர். நாற்றுகளை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் பண்ணை உரிமையாளர்கள் அனைவரும் விதை விற்பனை நிலைய உரிமம் பெற்றுதான் விற்பனை செய்யவேண்டும்.

உரிமம் பெறாமல் விற்பனை செய்யும் நாற்றுப் பண்ணை உரிமையாளர்கள் மீது விதைச் சட்டத்தின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும். விவசாயிகளின்

தேவையை பயன்படுத்தி, தரமற்ற நாற்றுகளை விற்பனை செய்பவர் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும், காய்கறி நாற்றுப் பண்ணை அமைக்கும்போது நல்ல, தரமான விதைகளையே பயன்படுத்த வேண்டும். விதைகளைக் குவியல் வாரியாக பயன்படுத்தி நாற்றுப் பண்ணைகள் அமைக்க வேண்டும். நாற்றுகளின் விவரங்களை உரிய பதிவேடுகளில் குறித்துப் பதிவேடுகள் முறையாகப் பராமரிக்கப்பட வேண்டும்.

மேலும், தங்களது நாற்றுப் பண்ணைகளில் தரமான, வீரியமான, நல்ல மகசூல் தரக்கூடிய நாற்றுகளையே விற்பனை செய்யவேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "சம்பா பருவத்துக்கு குருமந்தூரில் 20 டன் விதை நெல் இருப்பு'

சம்பா பருவத்துக்குத் தேவையான 20 டன் விதை நெல் குருமந்தூர் வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருப்பு உள்ளதாக நம்பியூர் வேளாண்மை உதவி இயக்குநர் ஆசைத்தம்பி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

தற்போது சம்பா பருவம் துவங்கியுள்ளது. இதற்கென, அரசுச் சான்றிதழ் பெற்ற பல்வேறு புதிய நெல் விதைகள் குருமந்தூர் வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

இதில், ஏ.டி.டி. 38 ரகம் 5.5 டன், ஏ.டி.டி. 39 ரகம் 4.3 டன், ஏ.டி.டி. 49 ரகம் 2 டன், கோ.ஆர். 50 ரகம் 6.4 டன், கோ.ஆர். 51 ரகம் 2 டன் என மொத்தம் 20 டன் விதை நெல் இருப்பில் உள்ளது. கோ.ஆர். 50 மற்றும் 51, ஏ.டி.டி. 38, 39, 43 ஆகிய ரகங்களுக்கு கிலோவுக்கு ரூ. 10 மானியம் வழங்கப்படுகிறது. எனவே, விவசாயிகள் இந்த விதை நெல்லை பெற்றுப் பயனடையலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### இரவு முழுவதும் கொட்டித்தீர்த்த மழை: ஈச்சம்பாடி அணை நிரம்ப வாய்ப்பு

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மற்றும், கே.ஆர்.பி., அணையின் கீழ்பகுதியில், நேற்று முன்தினம் இரவு முழுவதும் கன மழை பெய்துள்ளதால், ஈச்சம்பாடி அணை விரைவில் நிரம்ப வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், நேற்று முன்தினம் இரவு, 9 மணியில் இருந்து, விடிய விடிய பெய்த மழையால், விவசாய நிலங்களில் தண்ணீர் தேங்கியது. தொடர் மழையால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நேற்று காலை நிலவரப்படி, கிருஷ்ணகிரியில் அதிகபட்சமாக, 67 மி.மீட்டர் மழை பெய்தது. மாவட்டத்தில் பெய்த மழை அளவு விவரம் வருமாறு: தளி, 45 மி.மீட்டர், நெடுங்கல், 39.60, ஓசூர், 31, பெனுகொண்டாபுரம், 30.20, பாரூர், 28.40, ராயக்கோட்டை, 21, போச்சம்பள்ளி, 13.40, சூளகிரி, 13, ஊத்தங்கரை, மூன்று மி.மீட்டர் என, 302 மி.மீட்டர் மழை பதிவானது. இதனிடையே, கிருஷ்ணகிரி அடுத்த கே.ஆர்.பி., அணையில் இருந்து, பாரூர் ஏரிக்கு வினாடிக்கு, 107 கன அடி நீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து, பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் சாம்ராஜ் கூறியதாவது: கே.ஆர்.பி., அணையின் கீழ் பகுதியில் உள்ள கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டணம், நெடுங்கல், பாரூர் போன்ற பகுதியில் இரவு முழுவதும் பெய்த மழைநீர், தென்பெண்ணை ஆற்றில் கலந்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால், தர்மபுரி மாவட்டம் ஈச்சம்பாடி அணை விரைவில் நிரம்ப வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## ஏலக்காய் விலை ரூ.300 உயர்வு

ஈரோடு: தொடர் மழையால், ஏலக்காய் வரத்து சரிந்து, கிலோவுக்கு, 300 ரூபாய் விலை உயர்ந்துள்ளது.

கேரளாவில் பெரும்பாலான பகுதி, தமிழகத்தில் தேனி, கம்பம், குமுளி, போடி, தேனி போன்ற பகுதிகளில் இருந்து ஏலக்காய் அதிகமாக விற்பனைக்கு வருகிறது.ஆறு மாத பணப்பயிரான ஏலக்காய், கேரளாவில் தொடர் மழை பெய்வதால் வரத்து குறைந்துள்ளது. ஈரப்பதமாக ஏலக்காய் இருந்தால், விற்பனைக்கு எடுத்துக் கொள்ள முடியாது. எனவே, இருப்பில் வைத்திருந்த ஏலக்காய், தற்போது விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது.

இதுபற்றி, ஈரோடு கொங்காலம்மன் அனைத்து வியாபாரிகள் சங்க துணைத்தலைவர் விமல் கூறியதாவது: கடந்த ஜூலை மாதம் சில்லறை விற்பனையில், ஒரு கிலோ ஏலக்காய், 1,250 ரூபாய்க்கும், மொத்த விலையில், 1,000 ரூபாய்க்கும் இருந்தது. தற்போது, மொத்த விலையில், 1,300 முதல், 1,400 ரூபாயாகவும், சில்லறை விலையில், 1,500 ரூபாயாகவும் விலை உயர்ந்துள்ளது. ஏலக்காயில் தடிமனை வைத்து, 6 மி.மீ., - 7, 7.5, 8 மி.மீட்டர் என்றும், உலர்ந்த நல்ல பச்சை நிற ஏலக்காய்க்கு விலை அதிகம். ரகத்தின்படி, 650 ரூபாய்க்கு விற்ற ஏலக்காய், 900 ரூபாய்க்கும், 750க்கு விற்றவை, 1,000 ரூபாய்க்கும், 950க்கு விற்றவை, 1,200க்கும், 1,000க்கு விற்றவை, 1,300 முதல், 1,400 ரூபாய்க்கும் விற்பனையாகிறது. பொதுவாக, ஜன., இறுதி வரை பண்டிகை, விழாக்கள், கோவில் நிகழ்ச்சிகள், முகூர்த்த நாள் போன்ற காரணத்தால், ஏலக்காய் தேவை அதிகரிக்கும். எனவே, இன்னும் மூன்று மாதத்துக்கு ஏலக்காய் விலை குறைய வாய்ப்பில்லை. இருப்பினும், தற்போது நல்ல மழை பெய்வதால், சாகுபடி அதிகரித்துள்ளது. எனவே, இருப்பு வைத்திருப்போர் அதிகமாக விற்பனைக்கு கொண்டு வந்தால், மேலும் விலை உயராது. இவ்வாறு அவர் கூறினார்.

## 3 மணி நேரத்துக்கு மேல் நீடித்த மழை

ஈரோடு: ஈரோடு மற்றும் சுற்றுப்பகுதியில் நேற்று மாலை, 3 மணி நேரத்துக்கு மேல் மழை நீடித்தது. கடந்த ஒரு வாரமாக, ஈரோடு மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. நேற்று காலை முதல் கடும் வெப்பத்துடன் கூடிய வெயில் வாட்டியது. மாலை, 5.30 மணிக்கு துவங்கிய மழை, இரவு, 8 மணி வரை நீடித்தது. அப்போது, பலத்த மின்னல், இடியும் காணப்பட்டது. தொடர்ந்து கடும் மேக மூட்டமாக காணப்பட்டதுடன், லேசான தூறல் நீடித்தது. ஒரு வாரமாக பெய்து வரும் மழையால், மாலையில் இதமான குளிர் நிலவுகிறது.

## 'நாற்றுப்பண்ணைகளை பதிவு செய்து விதைகளை உற்பத்தி செய்ய வேண்டும்'

ஈரோடு: "விதை, நாற்றுப்பண்ணைகளை பதிவு செய்து, தரமான விதைகளை மட்டுமே உற்பத்தி செய்ய வேண்டும். அல்லது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்," என, விதை ஆய்வு துணை இயக்குனர் அண்ணாதுரை எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து, அவர் கூறியதாவது: ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் காய்கறி நாற்றுகள், பூ மற்றும் பழச்செடிகள் விவசாயிகளுக்கு வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. குறிப்பாக, காய்கறிகளான வெங்காயம், தக்காளி, கத்திரி போன்றவை விற்பனை செய்யப்படுகிறது. விவசாயிகளின் தேவைகளுக்கேற்ப பலர், காய்கறி நாற்றுப்பண்ணைகளை அமைத்து வினியோகம் செய்கின்றனர். நாற்றுக்களை உற்பத்தி செய்து, விற்பனை செய்யும் நாற்றுப்பண்ணை உரிமையாளர்கள் அனைவரும் விதை விற்பனை நிலைய உரிமம் பெற்று விற்பனை செய்ய வேண்டும். உரிமம் பெறாமல் விற்பனை செய்யும் நாற்றுப்பண்ணை உரிமையாளர்கள் மீது, விதைச்சட்டத்தின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும். விவசாயிகளின் தேவையை பயன்படுத்தி, தரமற்ற நாற்றுகளை, விற்பனை செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். காய்கறி நாற்றுப்பண்ணை அமைக்கும்போது, நல்ல தரமான விதைகளையே பயன்படுத்த வேண்டும். விதைகளை குவியல் வாரியாக பயன்படுத்தி, நாற்றுப்பண்ணைகள் அமைக்க வேண்டும். நாற்றுக்களின் விவரங்களை உரிய பதிவேடுகளில் குறித்து,

பதிவேடு முறையை பராமரிக்க வேண்டும். நாற்றுப்பண்ணைகளில் தரமான, வீரியமான, நல்ல மகசூல் தரக்கூடிய நாற்றுக்களையே விற்பனை செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## தூறல் மழையால் துளிர்விடும் நிலக்கடலை

அந்தியூர்: அந்தியூரை அடுத்துள்ள பருவாச்சி, செம்புளிச்சாம்பாளையம் உள்ளிட்ட, 50க்கும் மேற்பட்ட கிராமங்களில், ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவு மானாவாரி நிலத்தில், நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. போதிய மழை இல்லாமல், கருகத் தொடங்கிய நிலையில், கடந்த நான்கு நாட்களாக மாலை நேரத்தில் பெய்து வரும் தூறல் மழையால், கருகிய செடிகள் மீண்டும் துளிர்விடத் துவங்கியுள்ளன. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

## பீட்ரூட் விளைச்சல் அதிகரிப்பு

கோத்தகிரி: கோத்தகிரி கூக்கல்தொரை பகுதியில் பீட்ரூட் விளைச்சல் அதிகரித்துள்ள நிலையில், விலை இறங்கியுள்ளதால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கோத்தகிரி நெடுகுளா, சுள்ளிகூடு மற்றும் கூக்கல்தொரை பகுதிகளில், விவசாயிகள் அதிக பரப்பளவில், பீட்ரூட் பயிர் செய்து, பராமரித்து வருகின்றனர்.

மூன்று மாதங்களிலேயே, அறுவடைக்கு தயாராகும் பீட்ரூட் விளைச்சல், நடப்பாண்டு, அதிகரித்துள்ளது. கடந்த மூன்று வாரங்களுக்கு முன், கிலோவுக்கு, 30 ரூபாய்க்கு குறையாமல் விலை கிடைத்து வந்ததால், விவசாயிகள் லாபம் அடைந்தனர்.

தற்போது, படிப்படியாக விலை இறங்கி, அதிகபட்சமாக,

15 ரூபாய் மட்டுமே விலைக் கிடைப்பதால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.மழை நீடித்தால், தயாரான பீட்ரூட் தோட்டங்களிலேயே அழுகிவிடும் என்பதால்,சாகுபடிக்காக போட்ட 'முதல்' கிடைத்தால் போதும் என்ற நிலையில், விவசாயிகள் அதனை எடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். விவசாயி

போஜன் கூறுகையில், “தற்போது, பீட்ரூட் விளைச்சலில் லாபம் இல்லை; அதனால், அனைவரும் கவலை அடைந்துள்ளோம்,” என்றார்.

## 'பட்டர் புரூட்' விளைச்சல் அமோகம் அதிகளவில் வளர்த்தால் லாபம்

கோத்தகிரி:கோத்தகிரி பகுதியில் பட்டர் புரூட் பழ விளைச்சல் களைக்கட்டியுள்ளதால், விலை உயர்ந்துள்ளது.

கோத்தகிரி பகுதியில், தேயிலை தோட்டங்களுக்கு நடுவிலும், வீட்டு தோட்டங்களிலும் விவசாயிகள், பட்டர் புரூட் மரங்களை நடவுச்செய்து பராமரித்து வருகின்றனர். தற்போது, இப்பழங்களின் விளைச்சல் அதிகரித்துள்ளதால், விவசாயிகளின் பயன்பாட்டிற்கு போக, மீதம் உள்ள பழங்களை, கோத்தகிரி மார்கெட் பகுதியில், 60 ரூபாய்வரை, விற்பனை செய்து வருகின்றனர். மருத்துவம் குணம் உடைய, 'அவகாடோ' என்ற பெயர் பெற்ற இப்பழங்கள், ஷாம்பூ தயாரிக்கவும், உடல் எடை அதிகரிக்கவும், சருமத்தை மெருகேற்றவும் பயன்படுத்தப்படுகிறது. இப்பழம், சர்க்கரை நோய் மற்றும் கேன்சர் நோயை கட்டுப்படுத்தி, நோய் எதிர்ப்பு சக்தியை தருவதாலும், விட்டமின்கள், கலோரி மற்றும் நார்ச்சத்து அடங்கியுள்ளதால், மக்கள் அதிகளவில் விரும்பி வாங்கிச்செல்கின்றனர்.

தோட்டக்கலை இணை இயக்குனர் மணி கூறுகையில், “கொடைக்கானல் பகுதியில் இப்பழங்கள் அதிகளவில் விளைவிக்கப் படுகிறது. நீலகிரி மாவட்டத்தில், பர்லியார் மற்றும் கோத்தகிரி உள்ளிட்ட பகுதிகளிலும், சில இடங்களில் அதிக மரங்கள் உள்ளன. மருத்துவம் குணம் கொண்ட இப்பழங்களின் மரங்களின் நாற்றுகள், தோட்டக்கலைத்துறை மூலம் விற்பனை செய்யப்படுகிறது. தேவைப்படும் விவசாயிகள், வாங்கி பயனடையலாம்” என்றார்.

## காபி தொழில் நுட்ப பயிற்சி

காண்டிக்குடி, காபி சிறுவிவசாயிகள் சுயஉதவிக்குழு மற்றும் பேர் டிரேடர் காபி ஏற்றுமதி சான்றிதழ் நிறுவனம் இணைந்து காண்டிக்குடி மண்டல காபி ஆராய்ச்சி நிலையத்தில் காபி தொழில்நுட்ப பயிற்சி முகாம் நடத்தின.

காபி அபிவிருத்தியாளர் மனோகரன் தலைமை வகித்தார். சுயஉதவிக்குழு தலைவர் புருசோத்தமன் முன்னிலை வகித்தார். செயலர் ரவிச்சந்திரன் வரவேற்றார். பூச்சியியல் நிபுணர் ரூபக்குமார், நோயியல் நிபுணர் சவுந்தராஜன், உளவியல் நிபுணர் ஜெயக்குமார், சான்றிதழ் நிறுவன ஆலோசகர் ரோகிணி சந்திரசேகரன் பயிற்சியளித்தனர். பொருளாளர் செல்வராஜ் நன்றி கூறினார்.

## மானியத்துடன் கூடிய தீவனப்பயிர் அபிவிருத்தி திட்டம்

விழுப்புரம்: அரசு மானியத்துடன் கூடிய தீவனப்பயிர் அபிவிருத்தி திட்டத்தில் பயனடைய கால்நடை வளர்ப்பு விவசாயிகள் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
இது குறித்து கலெக்டர் லட்சுமி விடுத்துள்ள செய்திக்குறிப்பு:

கால்நடைகள் உற்பத்தித் திறனுக்கு தீவனம், பசுந்தீவனம் மிகவும் இன்றியமையாதது.பால் உற்பத்தியை பெருக்க கறவை மாடுகளுக்கு தேவையான அளவு பசுந்தீவனம் வழங்குவது மிகவும் இன்றியமையாதது.

கால்நடைகளுக்கான மொத்த உற்பத்தி செலவில் சூ௫ - எ0 சதவீதம், தீவனம் மற்றும் பசுந்தீவன உற்பத்திக்கு மட்டுமே செலவிடப்படுகிறது. கால்நடைகளுக்கு பசுந்தீவன தேவை மற்றும் உற்பத்திக்கு இடையே மிகப்பெரிய இடைவெளி உள்ளது.

எனவே, தீவன பற்றாக்குறை தீர்க்கவும், கால்நடை வளர்ப்போர் பசுந்தீவன உற்பத்தியை ஊக்கப்படுத்தவும், தமிழக அரசு கடந்த ௫ ஆண்டுகளாக மாநில தீவன அபிவிருத்தி திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.
விவசாயிகள் வாழ்க்கை தரம் மேம்பட கால்நடை பராமரிப்புத்துறை மூலம் நடப்பு நிதியாண்டில் அரசு மானியத்துடன் கூடிய தீவனப்பயிர் சாகுபடி திட்டங்கள், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்துடன் இணைந்து செயல்படுத்தப்பட உள்ளது.

அதன்படி, இறவையில் கம்பு நேப்பியர் புல் அ00 ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்ய வழங்குதல் (பயனாளிக்கு குறைந்த பட்சம் 0.உ௫ ஏக்கர், அதிகபட்சம் ஒரு ஏக்கர்). மானாவாரியில் ௬,000 ஏக்கரில் தீவனச் சோளம் மற்றும் தீவனத் தட்டைப்பயறு சாகுபடி செய்ய தீவன விதைகள் வழங்குதல் (ஒரு பயனாளிக்கு 0.உ௫ ஏக்கர் அதிகபட்சம் ஒரு ஏக்கர்) திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

மேலும், க௫0 புல் நறுக்கும் கருவிகள் சூ0 சதவீத மானியத்தில் வழங்குதல், உ௫0 அசோலா திடல் அமைக்க ரூ. உ,௫௫0 மானியம் (க00 சத மானியம்), ஒவ்வொரு

பயனாளிக்கும் அதிகபட்சம் உ அசோலா அலகுகள், மர வகை தீவனத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்த வெல்வேல், பூவரசு, கிலைரிசிடியா, வாகை, கல்யாண முருங்கை, வேம்பு, கொடுக்காபுளி போன்ற ரு0 ஆயிரம் மரக்கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்குதல், மர வகை தீவனப்பயிர் உற்பத்தியை பெருக்குதல் மூலம் கோடை மற்றும் தீவனப் பற்றாக்குறை காலங்களில் தீவனம் கிடைக்கச் செய்தல் உள்ளிட்ட திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

இதேபோல் அ00 சைலேஜ் பைகள் தீவனப்பயிர் அதிகளவில் கிடைக்கும் காலங்களில் அவற்றை சேகரித்து, பதப்படுத்தி, ஊறுகாய் புல் ஆக கால்நடைகளுக்கு தீவனப் பற்றாக்குறை காலங்களில் வழங்குவதற்கு உரு0 கிலோ கொள்ளளவு உடைய ச சைலேஜ் பைகள் ஒரு விவசாயிக்கு ஊறுகாய் புல் தயாரித்திட இலவசமாக வழங்கப்படும்.

இத்திட்டங்களில் பயன்பெற விரும்பும் கால்நடை வளர்ப்பு விவசாயிகள், தங்கள் பகுதி கால்நடை உதவி மருத்துவர் அல்லது உதவி இயக்குனரை நேரில் தொடர்பு கொள்ளலாம்.

விருப்பமுள்ள திட்டங்களை குறிப்பிட்டு, எழுத்து மூலமாக விண்ணப்பம் அளிக்க வேண்டும். இவ்வாறு, அந்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## உழவர் பாதுகாப்பு திட்ட முகாம்

கிருஷ்ணராயபுரம்: லாலாப்பேட்டை அடுத்த கள்ளப்பள்ளி கிராம நிர்வாக அலுவலகத்தில், உழவர் பாதுகாப்பு திட்ட உதவிதொகைகள் வழங்க, பயனாளிகளிடம் மனுக்கள் பெறப்பட்டது. கிருஷ்ணராயபுரம் சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் திருவாசகம் தலைமையில், கள்ளப்பள்ளி வி.ஏ.ஓ., அலுவல வளாகத்தில், உழவர் பாதுகாப்பு திட்ட முகாம் நடந்தது. கள்ளப்பள்ளி மற்றும் சிந்தலவாடி பஞ்சாயத்து மக்கள், திட்டத்தில் வழங்கப்படும் உதவிதொகைகள் பெற மனு அளித்தனர். இதில், வி.ஏ.ஓ.,க்கள் நாமசிவாயம், சேதுபதி உள்பட பலர் பங்கேற்றனர்.

## நகரில் இடியுடன் பலத்த மழை

கரூர்: கரூரில் கடந்த சில நாட்களாக வெயில் சுட்டெரித்த நிலையில், திடீரென நேற்று மாலை, மழை கொட்டித் தீர்த்தது. தமிழகம் முழுவதும் கடந்த, ஆகஸ்ட் இறுதி வாரத்தில் இருந்து, வெயில் சுட்டெரித்து வருகிறது. கரூர் மாவட்டத்தில் கடந்த, ஒரு மாத காலமாக வெயில் தாக்கம் அதிகமிருந்தது. இந்நிலையில் நேற்று மாலை, 5.30 மணி முதல் கரூர் நகரில் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது. இகனால், கடங்க ஒரு வார காலமாக கொளுக்கும் வெயிலில் அவகிப்பட்டு வந்த, நகர மக்களுக்கு நேற்று மாலை பெய்த மழை சற்று குளிர்ச்சியை தந்தது.

## இரண்டாம்போக காய்கறி சாகுபடிக்கு தயார்

மூணாறு வட்டவடையில் இரண்டாம்போக காய்கறி சாகுபடிக்கு விவசாயிகள் தயாராகி வருகின்றனர்.

மூணாறு அருகில் உள்ள வட்டவடை ஊராட்சியில் 46 ஆயிரம் ஏக்கரில் காய்கறி சாகுபடி நடக்கிறது. குறிப்பாக இங்கு குளிர் கால பயிர்களான முட்டைக்கோஸ், பூண்டு, உருளைக்கிழங்கு, காரட்,பீன்ஸ் வகைகள் உட்பட பல்வேறு காய்கறிகள் சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு தற்போது இருபோக சாகுபடி மட்டும் நடந்து வருகின்றது.

கோடையில் கண்ணீர் கட்டுப்பாடு நிலவும் என்பகால், நிலங்கள் முழுவகும் கரிசாக காணப்படும். இகனை கவிர்க்க ஆண்டு முழுவகும் விவசாயம் என்ற நோக்கக்கில் மூன்றுபோக சாகுபடிக்கு ஏற்ப விளை நிலங்களில் சொட்டு நீர் பாசனம் வசதி ஏற்படுக்கப்பட்டு வருகிறது.இகற்கான பணிகள் கற்போது நடந்து வருவதால், வரும் கோடையில் சொட்டு நீர் பாசனம் மூலம் சாகுபடி நடக்கும் என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள் உள்ளனர்.

தென் மேற்கு பருவ மழையை முன்னிட்டு முகல் போக சாகுபடி கடந்க ஜூனில் தொடங்கியது. மழையால் எவ்வித பாதிப்புகளும் இன்றி விவசாயம் செழித்ததால் மகிழ்ந்த விவசாயிகள், விளை பொருட்களுக்கு போதிய விலை கிடைக்காததை எண்ணி வருந்தினர். எனினும் இகனை பொருட்படுக்காமல், கற்போது இரண்டாம்போக சாகுபடிக்கு கயாராகி வருகின்றனர்.இதற்கு வசதியாக விளை நிலங்களை செம்மைபடுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

**முதல்போக நெல் நடவு பணிகளை மேற்கொள்ள முடிவு: விவசாயிகள் கூட்டத்தில் தீர்மானம்**

உத்தமபாளையம், முதல் போக சாகுபடிக்கு தண்ணீர் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நடவு பணிகளை மேற்கொள்ளப் போவதாக விவசாயிகள் கூறிய கருத்தை, விவசாயிகள் சங்கம் ஏற்றுக் கொண்டது. கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் சங்க அவசர ஆலோசனை கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தென்மேற்கு பருவ மழை ஏமாற்றியதால், கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகளுக்கு முதல் போக நெல் சாகுபடியில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இது கூடலூாரில் ஆரம்பித்து பழநிசெட்டிபட்டி வரை நடைபெறும். மொத்தம் உள்ள 14 ஆயிரத்து 707 ஏக்கர் பரப்பில் இதுவரை 10 ஆயிரம் ஏக்கர் வரை நடவு பணிகள் முடிந்துள்ளது.
இதில் குறிப்பாக உத்தமபாளையத்தில் வடக்குபரவு மற்றும் தெற்கு பரவுகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பரப்பில் நடவு செய்வதில் விவசாயிகள் தயங்கி வந்தனர். இது தொடர்பான அவசர ஆலோசனை கூட்டம் உத்தமபாளையத்தில் நேற்று நடைபெற்றது. கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் சங்க தலைவர் தர்வேஷ்முகைதீன் தலைமை வகித்தார்.

செயலாளர் சகுபர் அலி முன்னிலை வகித்தார். நீர் மேலாண்மை நிர்வாகி சட்டாம்பிள்ளை அபுதாகீர் முன்னிலை வகித்தார்.

தீர்மானம்
கூட்டத்தில் பெரியாறு அணை நீர் மட்டம் மளமளவென சரிந்து வருவது பற்றி விவாதிக்கப்பட்டது. 'ஒரு சிலர்இன்னும் சில நாட்கள் பொறுத்திருந்து பார்த்து நடவு செய்யலாம் என்றனர்.

பெரும்பாலான விவசாயிகள் அணையின் நீர்மட்டம் உயர்ந்தாலும், சரி உயராவிட்டாலும் சரி, முதல் போக சாகுபடிக்கென நடவு செய்தே ஆக வேண்டும் என்று வலியுறுத்தினர். அதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சங்க நிர்வாகிகள் பொதுப்பணித்துறையிடமிருந்து வாதாடி தண்ணீரை பெற்றுத்தர வேண்டுகோள் விடுத்தனர்.

பதிலளித்த சங்க நிர்வாகிகளும், 'அணையின் நீர் மட்டம் குறைந்து வருகிறது. இருக்கும் தண்ணீரை அனைவருக்கும் பகிர்ந்தளிக்க அதிகாரிகள் தயாராக

உள்ளனர்.

எனவே வடகிழக்கு பருவமழை பெய்யும் என்ற நம்பிக்கையில் நடவு பணிகளை மேற்கொள்ளுங்கள்,' என்று கூறினர்.

அணையின் நீர் மட்டம் 116.40 அடியாகவும், அணைக்கு 300 கனஅடி வரத்தும், அணையில் இருந்து 500 கனஅடி திறந்தும் விடப்படுகிறது. அதன்படி இன்று முதல் நடவு பணிகள் விறுவிறுப்பாக நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## கருவி மூலம் நேரடி நெல் விதைப்புவிவசாயிகளுக்கு அதிகாரிகள் அறிவுரை

திருவாடானை, :சம்பா நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் வரிசை விதைப்பு கருவி மூலம் நேரடி நெல் விதைப்பு செய்யுமாறு வேளாண்மை துறையினர் அறிவுரை வழங்கியுள்ளனர்.

திருவாடானை வேளாண்மை உதவி இயக்குநர் நாகராஜ் கூறியதாவது: திருவாடானை வட்டாரத்தில் 26 ஆயிரம் எக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி நடக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

சம்பா நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் சான்றுபெற்ற தரமான நெல் விதைகளை வாங்கி வரிசை விதைப்பு கருவி மூலம் நேரடி விதைப்பு செய்யவேண்டும். கருவியை பயன்படுத்துவதால் சரியான ஆழத்தில் வரிசையாக விதைகள் விழுவதால் மகசூல் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. விதை, இடுபொருட்கள் செலவு குறைகிறது. நல்ல காற்றோட்டம் கிடைப்பதால் பயிர்கள் செழித்து வளரும். உரம், மருந்து தெளிப்பு, அறுவடை பணிகள் எளிதாகும். ஆகவே விவசாயிகள் அனைவரும் நடப்பு பருவத்தில் வரிசை விதைப்பு கருவி மூலம் நேரடி நெல் விதைப்பு செய்யவேண்டும், என்றார்.

## கமுதியில் பலத்த மழை: விவசாயிகள் மகிழ்ச்சி

கமுதி, :கமுதியில் நேற்று 2 மணி நேரம் தொடர்ந்து பெய்த பலத்த மழையால் விவசாய நிலங்களில் தண்ணீர் தேங்கியுள்ளது. சம்பா நெல் சாகுபடிக்கு உகந்தது என்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இந்தாண்டு கோடைமழை ஏமாற்றியதால் விளைநிலங்கள் வறண்டுவிட்ட நிலையில் விவசாய பணிகளை துவக்க முடியாமல் விவசாயிகள் கவலையடைந்தனர்.

இந்நிலையில் நேற்று மதியம் 1 மணியிலிருந்து 3 மணி வரை தொடர்ந்து பலத்த மழை பெய்தது. இந்த மழை முதுகுளத்தூரிலும் பெய்தது. விளைநிலங்களில் தண்ணீர் தேங்கியுள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## நிலக்கடலை, உளுந்து பயிரில்அதிக லாபம் பெற யோசனை

சிவகங்கை, :நிலக்கடலை, உளுந்து பயிர்களில் கூடுதல் மகசூல் பெற வேளாண்மைத் துறை யோசனை தெரிவித்துள்ளது. மாவட்ட விதைச்சான்று உதவி இயக்குனர் லட்சுமி பிரபா கூறியதாவது: மாவட்டத்தில் தற்போது பயறு, நிலக்கடலை சாகுபடி தீவிரமாக நடக்கிறது. நீர்வசதி உள்ள இடங்களில் உளுந்தில் வம்பன் 5, வம்பன் 6 ரகங்களும், நிலக்கடலையில் கதிரி 6, ஐ.சி.ஐ.சி., 9114 (இக்ரிசாட்) ரகங்களும் ஏற்றது. நல்ல தரமான சான்று பெற்ற விதைகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

சான்று பெற்ற விதைகளில் ஆதார நிலைக்கு வெள்ளை நிற சான்று அட்டையும், சான்று நிலைக்கு ஊதா நிற சான்று அட்டையும் பொருத்தப்பட்டிருக்கும். இதில் அதிக முளைப்பு திறன் இருப்பதால் 20 முதல் 30 சதவீதம் வரை கூடுதல் மகசூல் பெற முடியும். பயிர் ஒரே நேரத்தில் பூத்து, முதிர்ச்சி அடையும். எனவே ஒரே நேரத்தில் அறுவடையும் செய்யலாம். இதன்மூலம் நல்ல விலை கிடைப்பதால் இரட்டிப்பு லாபம் பெறலாம். இவை 8, 10 , 20 , மற்றும் 50 கிலோ சிப்பங்களில், வேளாண்மை விரிவாக்க மையங்கள், உரிமம் பெற்ற தனியார் நிலையங்களிலும் கிடைக்கும். விதைகளை காலாவதி தேதி பார்த்து வாங்க வேண்டும், என்றார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### 6.5லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி இன்று தொடக்கம்

சேலம்: சேலம் மாவட்டத்தில் இன்று (1ம்தேதி) முதல் 21ம் வரை 6.5லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி ேநாய் தடுப்பூசி போட, முடிவு செய்யப்பட்டுள்ளது. சேலம் மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை மற்றும் ஆவின் நிறுவனம் சார்பில், 6 லட்சத்து 5 ஆயிரம் கால்நடைகளுக்கு இலவசமாக கோமாரிநோய் தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தடுப்பூசி போடும் பணி இன்று (1ம்தேதி) துவங்கி, வரும் 21ம் தேதி வரை நடக்கிறது.இது குறித்து கலெக்டர் சம்பத் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

சேலம் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட 200 மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. கோமாரி நோய் தடுப்பூசி போடும்பணி இன்று துவங்கி, வரும் 21ம் தேதி வரை நடக்கிறது. கோமாரி நோய் தடுப்பூசி போடப்படும் கிராமங்களில் கால்நடைகள் வளர்ப்பவர்களுக்கு தடுப்பூசி ேபாடும் நாள், முன்கூட்டியே தெரிவிக்கப்படும். அந்த நாட்களில் கால்நடை வளர்ப்போர், தங்களது கால்நடைகளை கொண்டு வந்து தடுப்பூசி போட்டுக்கொள்ளலாம். ஒவ்வொரு கிராமத்திலும் ஒரே நாளில் அனைத்து பசு, எருமைகளுக்கும் தடுப்பூசி போடப்படும். எருமைகள் கருவுற்றிருந்தாலும், தடுப்பூசி போடுவதால் எந்த பாதிப்பும் ஏற்படாது. கன்றுகளுக்கு நோய் எதிர்ப்புத் திறன் ஏற்படும் என்பதால் தயக்கமின்றி கோமாரி நோய் தடுப்பூசி போட்டுக்கொள்ளலாம்.இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பரமத்தி வேலூரில் வெற்றிலை விலை உயர்வு

பரமத்தி வேலூர்: பரமத்தி வேலூரில், வெற்றிலை விலை உயர்ந்துள்ளது. நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டத்தில் வெற்றிலை சாகுபடி பிரதானம். கொடிக்கால்களில் பறிக்கப்படும் வெற்றிலையை கட்டுகளாக கட்டி மொத்தமாக எடுத்து வந்து பரமத்தி வேலூரில் உள்ள மண்டிகளில் ஏலத்தின் மூலம் விற்பனை செய்து வருகின்றனர். வெளி மாநிலங்களிலிருந்தும், வெளி மாவட்டங்களிலிருந்தும் வரும் வியாபாரிகள் வெற்றிலைகளை கொள்முதல் செய்து லாரிகளில் ஏற்றிச்செல்வார்கள். கடந்த வாரம் கற்பூரி வெற்றிலை முதல் ரகம் ரூ.1700க்கும், இரண்டாவது ரகம் ரூ.1500க்கும் ஏலம் போனது. அதேபோல், வெள்ளைக்கொடி முதல்ரகம் ரூ.7000க்கும், இரண்டாவது ரகம் ரூ.6,000க்கும் ஏலம் போனது. இந்த வாரம் கற்பூரி முதல் ரகம் ரூ.2100க்கும், இரண்டாவது ரகம் ரூ.1750க்கும் ஏலம் போனது. வெள்ளைக்கொடி முதல் ரகம் ரூ.7500க்கும், இரண்டாவது ரகம் ரூ.6500க்கும் ஏலம் போனது. திருமண காலங்கள் தொடர்ந்து வருவதால் வெற்றிலை விலை உயர்ந்துள்ளது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## மாவட்டம் முழுவதும் 3.53 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம் இன்று துவக்கம்

நாமக்கல்: நாமக்கல் மாவட்டம் முழுவதும் 3.53 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரிநோய் தடுப்பூசி போடப்படுகிறது. இதற்கான சிறப்பு முகாம் இன்று துவங்குகிறது. நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் கோமாரிநோய் தடுப்பூசிப்பணி முகாம் தொடர்பான முன்னேற்பாடு குறித்த ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. இதில் கலெக்டர் ஆசியா மரியம் பேசியதாவது:நாமக்கல் மாவட்டத்தில் செப்டமபர் மாதம் 1ம் தேதி(இன்று) முதல் 21ம் தேதி வரை 21 நாட்கள் கால்நடைகளுக்கு கோமாரிநோய் தடுப்பூசி போடும் முகாம்கள் நடைபெறுகிறது. மாவட்டத்தில் மொத்தமுள்ள 3.53 லட்சம் கால்நடைகளுக்கும் 100 சதவீதம் முழுமையாக தடுப்பூசி போட திட்டமிடப்பட்டுள்ளது. இதுதொடர்பாக நாமக்கல் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் கடந்த மாதம் சிறப்பு கிராமசபை கூட்டம் நடத்தப்பட்டு முகாம் நடைபெறும் நாட்கள் குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

கோமாரிநோய் தடுப்பூசி பணிக்காக மாவட்டம் முழுவதும் கால்நடை உதவி மருத்துவர்கள், கால்நடை ஆய்வாளர்கள், கால்நடை பராமரிப்பு உதவியாளர்களை கொண்டு 111 தடுப்பூசி குழுக்கள் அமைக்கப்பட்டு மாவட்டத்தில் உள்ள அனைத்து குக்கிராமங்களுக்கும் நேரில் சென்று அந்தந்த கிராமங்களிலேயே தடுப்பூசிப்பணிகள் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மேலும், மாட்டுச் சந்தைகள் நடைபெறும் இடங்களிலும் கோமாரிநோய் தடுப்பூசி போட சிறப்பு முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் மூன்று மாதத்திற்கு மேற்பட்ட கன்றுகள், பசு, எருது மற்றும் எருமை ஆகிய கால்நடைகளை ஒவ்வொரு கிராமத்திலும் குறிப்பிடப்பட்ட நாளில் குறிப்பிட்ட இடத்தில் நடைபெறும் சிறப்பு முகாமுக்கு அழைத்துச் சென்று தடுப்பூசி போட்டுக்கொள்ளவேண்டும். முகாம் குறித்த விழிப்புணர்வை ஊராட்சி மன்ற தலைவர்கள் ஏற்படுத்தவேண்டும். கலெக்டர் ஆசியா மரியம் தெரிவித்தார். கூட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் அர்த்தநாரி, உதவி இயக்குனர் ஜனகராஜ், மற்றும் பல்வேறு துறைஅரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## ஆடிப்பட்டம் முடிந்த நிலையில் விதைக்காக செடியிலேயே விடப்பட்ட சூரியகாந்தி சாகுபடி பரப்பு அதிகரிக்க வாய்ப்பு

நாமக்கல்: நாமக்கல் மாவட்டத்தில் ஆடிப்பட்டம் முடிந்த நிலையில் சூரியகாந்தியை பறிக்காமல் விதைக்காக செடியிலேயே விவசாயிகள் விட்டுள்ளனர்.

எண்ணெய் வித்துப் பயிர்களில் குறுகிய காலத்தில் வறட்சியைத் தாங்கி நல்ல மகசூல் தரக்கூடிய பயிர்களில் முக்கியமானது சூரியகாந்தி. இந்த எண்ணெய் சமையலில் அதிக அளவு பயன்படுத்தப்படுகிறது. சூரியகாந்தி எண்ணெய் இதய நோயாளிகளுக்கு சிறந்தது. மேலும் வார்னீஷ், பெயிண்ட், சோப்பு போன்ற பொருள்கள் தயாரிக்கவும் பயன்படுகிறது. நாமக்கல் மாவட்டத்தில் இருந்து கோவை, சென்னை, மதுரை, பெங்களூரு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு சூரியகாந்தி பூக்கள், வார்னீஷ், பெயிண்ட், சோப்பு தயாரிப்புக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

நாமக்கல் மாவட்டத்தில் முத்துகாபட்டி, மாதரமாதேவி, வடவூர், மோகனூர், கொல்லிமலை அடிவாரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சூரியகாந்தி சாகுபடி செய்யப்படுகிறது. ஆடிப்பட்டம் முடிந்த நிலையில் அடுத்த சாகுபடிக்காக

சூரியகாந்தி பூவை பறிக்காமல் செடியிலேயே விவசாயிகள் விட்டுள்ளனர். இதுகுறித்து கொல்லிமலை அடிவாரத்தை சேர்ந்த விவசாயிகள் கூறியதாவது: சூரியகாந்தியை பொருத்தவரை மானாவாரி நிலத்தில் ஆடிப்பட்டம் மற்றும் கார்த்திகை பட்டத்தில் சாகுபடி செய்யப்படுகிறது. சூரியகாந்தி பயிரிட ஏற்ற ரக விதைகளாக மாடர்ன், கே.1, கே.2 கோ.4 மற்றும் வீரிய ஒட்டு ரகமாக டிசிஎஸ்ஹெச்.1, எம்எஸ்ஹெச்.17, சன்சீன்85, பிஏசி.36, கேபிஎஸ்ஹெச்.1, கேபிஎஸ்ஹெச்.44 போன்ற ரகங்கள் பரிந்துரை செய்யப்படுகின்றன.

இவற்றின் அறுவடைக் காலம் 70 முதல் 80 நாள்கள் ஆகும். நாமக்கல்லில் கொளுத்தும் வெயிலிலும் சிறிதளவு நீராதாரத்தை கொண்டு சூரியகாந்தி அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. அதிக பராமரிப்பு செலவில்லாததால் நாமக்கல் மாவட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட ஏக்கரில் சூரியகாந்தி சாகுபடி செய்யப்படுகிறது. நாமக்கல்லில் நிலவும் வறட்சியிலும் விவசாயிகளுக்கு நல்ல லாபத்தை சூரியகாந்தி கொடுத்துள்ளது. இதனால், ஆடிப்பட்டம் முடிந்த நிலையிலும் பல பகுதிகளில் சூரியகாந்தி பூவை பறிக்காமல் விதைக்காக விட்டுள்ளனர். வரும் காலங்களில் சூரியகாந்தி பூவின் சாகுபடி பரப்பு அதிகரிக்க வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## நாமகிரிப்பேட்டையில் ரூ.30 லட்சத்திற்கு மஞ்சள் ஏலம்

நாமகிரிப்பேட்டை: நாமக்கல் மாவட்டம் நாமகிரிப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று முன்தினம் மஞ்சள் ஏலம் நடைபெற்றது. விரலி ரக மஞ்சள் 550 மூட்டைகளும், உருண்டை ரக மஞ்சள் 200 மூட்டைகளும், பனங்காலி ரக மஞ்சள் 10 மூட்டைகள் என மொத்தம் 760 மூட்டைகள் விற்பனைக்கு வந்தது. இதில், விரலி ரக மஞ்சள் குவிண்டால் ஒன்றுக்கு அதிகபட்சம் ரூ.9812க்கும், குறைந்தபட்சம் ரூ.7896க்கும், உருண்டை ரக மஞ்சள் குவிண்டால் ஒன்றுக்கு அதிகபட்சம் ரூ.8500க்கும், குறைந்தபட்சம் ரூ.7412க்கும், பனங்காலி ரக மஞ்சள் குவிண்டால் ஒன்றுக்கு அதிகபட்சம் ரூ.20,200க்கும், குறைந்தபட்சம் ரூ.13,072க்கும் ஏலம் போனது. ஆகமொத்தம் ரூ.30 லட்சத்திற்கு மஞ்சள் விற்பனையானது.

## திருமானூர் அருகே சம்பா சாகுபடி விழிப்புணர்வு முகாம்

அரியலூர்: திருமானூர் வட்டார வேளாண்மை துறையினரால், சம்பா சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்ட முன்னேற்பாடுகள் குறித்த விழிப்புணர்வு முகாம், திருமானூர் அருகேயுள்ள கீழகாவட்டாங்குறிச்சி கிராமத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியில், வேளா ண்மை உதவி இயக்குநர்(பொ) சாந்தி, ஊராட்சித் தலைவர் நளினி ராஜேந்திரன், உதவி வேளாண்மை அலுவலர் அரவிந்தன் ஆகியோர் பங்கேற்றனர். நிகழ்ச்சியின்போது வேளாண்மை உதவி இயக்குநர் பேசுகையில், "சட்டமன்றத்தில் நேரடி நெல் விதைப்புமூலம் சம்பா சாகுபடி செய்ய மானிய திட்டத்தை விவசாயிகளுக்கு தமிழக முதல்வர் அறிவித்தார்.

இத்திட்டத்தின்படி, விவசாயிகளுக்கு நேரடி நெல் விதைப்பு மேற்கொள்வதற்காக தரிசு நில உழவு பணிக்கென ஏக்கர் ஒன்றுக்கு ரூ.500, தரமான சான்றுபெற்ற விதைகள் பெற 1 கிலோவிற்கு ரூ.10, இயந்திர முறையில் நெல் விதைப்பு மேற்கொள்ள ஏக்கருக்கு ரூ.600, நேரடி நெல் விதைப்பு மேற்கொள்ளப்படும் இடங்களில் தோன்றும் களை பாதிப்பை கட்டுபடுத்த ஏக்கருக்கு ரூ.280, நடவு இயந்திரம் மூலம் நடவு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.2000, மற்றும் துத்தநாக சல்பேட் பயன்படுத்த ஏக்கருக்கு ரூ.200 வீதம் மானியம் வழங்கப்படும். மேலும், வேளாண்மை விரிவாக்க மையத்தில் சம்பா சாகுபடிக்கு தேவையான நெல்விதைகள், நுண்ணுயிர் உரங்கள் உள்ளிட்ட அனைத்தும் இருப்பு உள்ளது" என்றும் தெரிவித்தார். முகாமில், அட்மா திட்டம் தொடர்பான திட்டங்களை அட்மா திட்ட தொழில் நுட்ப வல்லுநர்கள் எடுத்துரைத்தனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை வேளாண்மை உதவி அலுவலர்கள் ஜெய்சங்கர், ராதா, மகேந்திரன் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

## நத்தத்தில் 1 மணி நேரம் மழை

நத்தம், : திண்டுக்கல் மாவட்டம் நத்தம் பகுதியில் காலையிலிருந்து மாலை வரை கடுமையான வெயிலின் தாக்கம் இருந்தது. இந்நிலையில் மாலை 4 மணி முதல் 5 மணி வரை கொட்டியது. இதனால் குளிர்ந்த காற்று விசியது. சாலையில் மழைநீர்

பெருக்கெடுத்து ஓடியது. இதனால் மக்கள் நடமாட்டம் குறைந்து காணப்பட்டது. மேலும் விவசாயிகள், கனமழையை எதிர்பார்த்து உள்ளனர்.

## பால் உற்பத்தியை பெருக்க அரசு மானியத்துடன் தீவனப்பயிர்

சிவகங்கை,: கால்நடைகளுக்கான தீவனப்பயிர் உற்பத்தி செய்ய அரசு மானியத்துடனான திட்டங்களுக்கு விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட நிர்வாகம் சார்பில் வெளியிட்ட அறிக்கையில், தீவனப் பற்றாக்குறையை போக்கவும், பசுந்தீவனத்தை உற்பத்தி செய்வதை ஊக்கப்படுத்தும் வகையிலும் கடந்த 5ஆண்டுகளாக மாநில தீவன அபவிருத்தி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கால்நடை பராமரிப்புத் துறை மூலம் 2016-17 நடப்பு நிதியாண்டில் அரசு மானியத்துடன் தீவனப்பயிர் சாகுபடி திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளது. நீர்ப்பாசனப் பகுதியில் தீவன சோளம் மற்றும் வேலி மசால் 0.25 ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்திட தீவன விதைகள் (பயனாளிக்கு அதிக பட்சம் 1 ஏக்கர்) வழங்கப்பட உள்ளது. மானாவாரியில் 0.25 ஏக்கர் பரப்பளவில் தீவன சோளம் மற்றும் தீவன தட்டைப் பயறு சாகுபடி செய்திட தீவன விதைகள் (பயனாளிக்கு அதிகபட்சம் 1 ஏக்கர்) வழங்கப்பட உள்ளது. மேற்கண்ட திட்டங்களுக்கு இதற்கு முன்னர் இத்திட்டத்தில் பயனடைந்தவராக இருக்கக் கூடாது. குறைந்தபட்சம் 2 மாடுகள் வைத்து, குறைந்தது 0.5 ஏக்கர் தீவனப் புல் பயிரிட்டுள்ள விவசாயிகள், சுயஉதவிக் குழுக்களுக்கு 60 சதவீத மானியத்தில் புல்வெட்டும் கருவி வழங்கப்பட உள்ளது.

அசோலா திடல் அமைக்க ரூ.2 ஆயிரத்து 550 மானியம் (100 சதவீத மானியம்) அதிக பட்சம் 2 அசோலா அலகுகள் வழங்கப்படும். தீவனப் பயிர் அதிகளவில் கிடைக்கும் காலங்களில் அவற்றை சேகரித்து பதப்படுத்தி, ஊறுகாய் புல் ஆக கால்நடைகளுக்கு தீவனப் பற்றாக்குறை ஏற்படும் காலங்களில் வழங்குவதற்கு 250 கிலோ கொள்ளளவு உடைய 4 பைகள் ஒரு விவசாயிக்கு இலவசமாக வழங்கப்படும். மரவகை தீவனத்தின் முக்கியத்துவத்தை உணர்த்த கல்யாண முருங்கை, அகத்தி உள்ளிட்ட ஒரு விவசாயிக்கு 10 மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்படும். இத்திட்டங்களில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள கால்நடை உதவி மருத்துவரை நேரில் தொடர்பு கொண்டு விண்ணப்பம் அளிக்க வேண்டும். அனைத்து திட்டங்களிலும் 30 சதவீதம்

தாழ்த்தப்பட்ட, பழங்குடியின பயனாளிகள் தேர்வு செய்யப்பட உள்ளனர். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அதிக மகசூல் பெற நெற்பயிருக்கு மேலுரமிட வேண்டும் : வேளாண்மை அதிகாரி விளக்கம்

நாகர்கோவில்: நாகர்கோவில் வேளாண்மை இணை இயக்குநர் இளங்கோ விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: குமரி மாவட்டத்தில் கடைவரம்பு பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற்பயிர் கதிர் உருவாகும் பருவத்தில் உள்ளது. கதிர் உருவாகும் பருவத்தில் இரண்டாவது மேலுரம் இட வேண்டும். இப்பருவத்தில் இடும் மேலுரமானது அதிக மகசூல் பெற அடிப்படையாக விளங்குகிறது. உரிய தருணத்தில் இடும் மேலுரம் நெற்பயிரில் ெநல் மணிகள் திரட்சியுடனும், பதரின்றியும், அதிக எடையுடனும் உருவாக வழிவகை செய்கிறது.

மேலுரமிடும் போது தழை மற்றும் சாம்பல் சத்தினை பரிந்துரைக்கப்பட்ட அளவில் இடுவது அவசியமானது. தழைச்சத்து, சாம்பல் சத்தினை தரவல்ல யூரியா 26 கிலோ, பொட்டாஷ் 6 கிலோ என்ற அளவில் ஒரு ஏக்கருக்கு இட வேண்டும். எனவே நெற்பயிருக்கு உரிய தருணத்தில் மேலுரமிட்டு விவசாயிகள் அதிக மகசூல் பெறலாம். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.